ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

சாஸ்திரிகள்.—அய்யரவர்களைக்கண்டு நல்வரவுகூறி க்ஷேம ஸமாச்சாரம் விசாரித்தார்.

அய்யர்—சாஸ்திரிகளவாள்! எல்லாம்ஸௌக்கியந்தான் ஒருஆச்சரியத்தைச் சொல்ல தங்களைப்பார்க்கவேண்டுமென்று வந்தேன். நேற்று ஓரிடத்தில் ஒருகூட்டத்தார் கூடிப்பேசுகையில் தங்களைப்போன்ற வேதியர்கள் யுக்திக்கொத்து வாராததையெல்லாம் சொல்லி பழைய எட்டிலெழுதி வைத்துக்கொண்டு உலகத்தாரை ஏமாற்றிவிட்டார்கள் என்று வாயில் வந்தபடி எல்லாம் பேசினார்கள். இந்தஇடத்தையும் கூட்டத்தையும் இப்பொழுது சொல்ல இஷ்டமில்லை. ஏன் அப்படி பெரியோர்களும் பழிசுமக்கிறார்களென எனக்கே வருத்தமாயிருந்தது. அதுவிஷயத்தில் உங்கள் அபிப்பிராயமேப்படி?

சாஸ்திரிகள்:—அய்யரவாள்! கேள்க்கவேண்டும். எழுதிவைத்த எந்த எழுத்தையும் நம்பக்கூடாதென்று அவர்கள் சொல்லுகிறார்களா? அல்லது பழைய எழுத்தை நம்பலாகாதென்கிறார்களா? எந்தஎழுத்தையும் நம்பக்கூடாதெனில் சமாச்சாரப் பத்திரிகைகளில் எழுதிவரும் தேசாந்தர ஸமாசாரத்தைநம்பி அது இஷ்டப்படத்தகுந்ததாயிருந்தால் சந்தோஷப்படுவதும், விபரீதமானால் கஷ்டப்படுவதும், பொருந்துமா? இந்த எழுத்தை நம்பலாமானால் பழையஎழுத்தை நம்புவதில் என்ன ஆக்ஷேபம்? சில எழுத்தை நம்பி சில எழுத்தை நம்பாத இவர்கள் உலகத்தாரை ஏமாற்றப் பார்க்கிறார்களா? அல்லது பெரியோர்கள் ஏமாற்றிவிட்டார்களா? என்பதைத் தாங்களே ஆலோசித்துப் பார்க்கலாமே.

அய்யர்:—எழுத்தை நம்புவதென்றால் எல்லா எழுத்தையும் நம்பவேண்டியதுதான், அதில் ஒருவிசேஷமிருக்கிறது. சமாசாரப் பத்திரிகைகளில் எழுதிவந்ததைக் கண்கூடாகப் பார்க்கவேண்டுமென்று ஒருவன் கருதினால் அந்தவிடஞ்சென்று நேரில் பார்த்து வந்துவிடலாம். பழைய எட்டிலெழுதியிருப்பதைக் காணவேணுமென்று கருதினால் கண்டுவரமுடியுமா? அப்படிவந்தவர் எவராவது இருக்கிறாரா?

சாஸ்திரி:—சரித்திரங்கேட்டதில்லையா? தசரதர்—துஷ்யந்தன்—அர்ஜுனன் முதலிய க்ஷத்திரியவீரர்கள் தேவாஸுரயுத்தத்தில் தேவர்களுக்கு சஹாயம் செய்யவேண்டி ஸ்வர்க்காதி லோகஞ்சென்று அஸுரர்களை ஜயித்து தேவர்களால் கொண்டாடி வெகுமதிக்கப்பட்டு இங்குவந்து அந்தலோகவைபவங்களை வர்ணித்திருக்கிறார்களே! அதுமாத்திரமா? வியாஸர்முதலியவர்களும் அனேகந்தடவை வந்து வர்ணித்திருப்பதாக இதிஹாஸங்களில் படித்துக்கேட்டதில்லையா?

அய்யர்:—இந்தக்கதையும் பழையகதைதானே. இப்பொழுது எவராவது இருக்கிறாரா?

சாஸ்திரி:—அதேவியாஸர் இப்பொழுதும் இருக்கிறார். பெரியோருக்குப் புலப்படுவார். நமது கண்ணுக்கெதிரில் வரவில்லை என்று நம்பாமல் இருக்கக்கூடாது. பெரியோர்கள் கண்டிருப்பதைக் கேட்டு அது உண்மையென்றும் அதுபோலவே பழையகாலத்திலுள்ளதெல்லாம் உண்மை என்றுநம்பி எல்லோரும் க்ஷேமமடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

நம்பிக்கையே நலம் பயக்கும்.

இப்பிரபஞ்சத்தில் எந்தமனிதனும் தனக்குத்தலைவலி, வயிற்றுவலி, அதிஸாரம், குஷ்டம், காமாலை முதலிய ரோகங்கள் உண்டாகட்டுமென்றும் அதனால் கஷ்டப்படுவோமென்றும் ஆசைப்படுவதே கிடையாது. ஆயினும் அந்த ரோகங்களால் பலர் பீடிக்கப்படுகிறார்களென்பது ப்ரத்யக்ஷானுபவம். சில ரோகங்களுக்குக்காரணம் இன்னதென்று அறியப்படுகிறது. அந்த காரணங்கள் ஒவ்வொரு ரோகங்களுக்கும் தனித்தனியாகவே வைத்திய நூல்களில் நிதானஸ்தானத்தில் கூறப்பட்டிருக்கின்றன. சில ரோகங்கள் நிதானஸ்தானத்தில் கூறப்பட்ட காரணங்களின்றியே சிலருக்குண்டாகின்றன. அதற்கு எவ்வளவு சிகித்ஸை செய்யினும் அனுகூலப்படாமலே போய்விடுகிறது. அதற்குக்காரணம் என்னவென்று ஆராய்ந்துபார்க்கும்போது சாஸ்திரங்களில் அது பூர்வஜன்மத்தில் செய்த பாபமென்று கூறப்படுகிறது. அதனால் வியாதிகளும் மூன்றுவகையாகப் பிரிக்கப்படுகின்றன. அங்ஙனமே வைத்ய நூல்களில்—

दृष्टापचारजः कश्चित्कश्चित्पूर्वापराधजः ।
कश्चित्तूभय जन्मा हि व्याधिरेवं त्रिधास्मृतः ॥

"திருஷ்டமான அபசாரங்களால் (அதாவது நிதானஸ்தானங்களில் கூறப்படுகின்ற அந்தந்தரோக காரணங்களால்) சிலரோகங்கள் உண்டாகின்றன. சில ரோகங்கள் ஜன்மாந்திர பாபத்தாலுண்டாகின்றன. இரண்டினாலும் சில ரோகங்கள் உண்டாகின்றன. இவ்விதம் ரோகம் மூன்றுவித காரணங்களாலேற்படுகின்றனவாம்" என்று கூறப்படுகின்றது. அதனால் எந்த ரோகங்களுக்குக்காரணம் கண்டுபிடிக்க முடியவில்லையோ. அவை கர்ம

வசத்தால் நேர்ந்த வியாதிகளாம். அது கர்மவினை தொலைந்தாற்றான் தொலையும். அதுவும் कर्मजः कर्मसंक्षयात् என்று வைத்திய நூல்களிலேயே கூறப்பட்டுளது. கர்மவிபாககிரந்தங்களிலும்

जन्मान्तरकृतंकर्म व्याधिरूपेण बाधते ।
तच्छान्तिरौषधैर्दानैर्जपहोमसुरार्चनैः ॥

“ஜன்மாந்திரத்தில் செய்யப்பட்ட தீவினை மறுபிறப்பில் வியாதி ரூபமாய் உபத்ரவிக்கிறது. அதற்குச் சாந்தியுண்டாகவேண்டுமானல் கர்மவிபாகங்களில் கூறப்படும் அததற்குறிய மந்திரஜபங்கள் ஹோமங்கள் தேவதார்ச்சனங்கள் இவைகளால் சாதித்துக் கொள்ளவேண்டும்” என்று கூறப்படுகிறது. மீளாப்பிணிபிடித்த தற்காலத்திய சிலர் அந்த ரோகபரிஹாரத்திற்காக திருஷ்டமான பல ஸாதனங்களைச் செய்துகொண்டு பயன்படாமல் பாரலௌகிக அதிருஷ்டத்தில் நம்பிக்கையில்லாமையால் ப்ரவிருத்திக்காமல் பாதி வயஸ்ஸிலேயே பிராணனையிழந்து விடுகிறார்கள். இந்த விஷயத்தில்—

वैद्यावदन्तिकफपित्तमरुद्विकारान् ज्योतिर्विदोग्रहगतिं परिवर्तयन्ति ।
भूताभिषङ्गइतिभूतविदोवदन्ति प्राचीनकर्मबलवन्मुनयोवदन्ति ॥

“வைத்தியர்கள் வாதபித்த கபங்களின் விகாரத்தால் ரோகமுண்டாயிற்றென்பர். ஜோஸ்யர்களோ கிரஹகதியால் வந்ததென்பர். மாந்திரீகர்களோ பூதாவேசத்தால் பிறந்ததென்பர். முக்காலத்தையுமறிந்த முனிவர்களோ மிகவும் வலுத்த முன் கர்மமே முக்கிய காரணமென்பார்கள்” என்றுபலர் பலவிதமாய் அபிப்பிராயப் படுவதாகக்கூறுவதுண்டு. அதில் அவரவர்கள் அந்தந்த காரணங்களாலேயே உண்டாவதாகக்கூறிவிடுவது சரியாகாது. ஆனல் எல்லா காரணங்களாலும் உண்டானதாகக்கூறுவது ஸித்தாந்தமாகும். அதாவது-பிராசீன பாபத்திற்கேற்றபடி ஜனனகாலத்தில் ஜாதகத்தில்கிருஹங்களமையும். அவர்களதுகதிபேதத்திற்குத்தக்கபடி வாதபித்த கபங்கள் விகாரத்தையடையலாம். பாபவசத்தால் பிறப்பையடைந்தவன் “பரலோகமில்லை, பிரமாணங்களில்லை—தெய்வங்களில்லை—வேதங்களில்லை—வேதியர் வஞ்சனை செய்ததைத்தவிற வேறில்லை—” என்பதாதி கண்டபடி கூசாமல் கூறு

மிடைபார்த்து கோபாவேசங்கொண்ட பூதப்பிரேதபிசாசங்களும் பிடித்துக்கொள்ளலாம். ஆகவே எல்லா காரணங்களும் சேர்ந்து குஷ்டம் க்ஷயம் முதலிய கொடியரோய் உண்டாயிருக்குமெனக் கூறவேண்டுமென்பதே சாஸ்திர ஸித்தாந்தம். இது யுக்திக்கு மொத்ததே. இதனால்,நாஸ்திகர் கூறுவது நியாயமற்றதென்பது ஸ்பஷ்டமாகிறது. ஜன்மாந்தரீய பாபவசத்தாலேற்பட்ட வியாதிகளுக்கும் கர்மவிபாகத்தில் கூறப்பட்டபடி ஜபஹோமதானாதிகளையும் சோதிடநூல்களில் கூறப்பட்டபடி ஸூரியாதி கிரஹங்களின் ஆராதனைகளையும் வைத்தியநூல்களில் கூறப்படும் சரியான சிகித்ஸையும் மந்திரசாஸ்திரங்களில் கூறுகிறபடி ரக்ஷாபந்தனம் முதலியவைகளையும் செய்தால் கண்டிப்பாய் அந்தவியாதிகள் விலகிவிடுகின்றன. அதனால் சாஸ்திரம் கூறுவது சரியாகவே இருக்குமென எல்லாவிஷயத்திலும் நம்பவேண்டும். வைத்தியசாஸ்திரம் ஜோதிடசாஸ்திரம் சொல்லுகிறபடி செய்துபார்த்தால் ஸத்தியமாகவே பலன்கிடைக்கிறது. இதுபோலவே ஸகல சுருதிஸ்மிருதி புராணாதிகளில் கூறப்படும் விஷயம் உண்மையாகவே இருக்குமென நாஸ்திகர்களும் நம்பலாம். சாஸ்திரீயஸாதனங்களில் சரியான காரணங்கள் கூறப்படவில்லையே யெனச் சிலருக்குச் சங்கையுண்டாகலாம். அதுசரியாகாது. சாஸ்திரீய விதியைத்தக்கவழியில் ஆக்ஷேபித்துவிடுவது காதால்கேட்டுஆநந்திக்கும் கானஸுகத்தை காதில்லாதவன் ஆக்ஷேபிப்பதுபோலும் கண்ணால் கண்டுகளிக்கவேண்டியரூபத்தைகுருடன் கண்டிப்பது போலுமாகும். அதனால் சோதிடவைத்தியசாஸ்திர திருஷ்டாந்தங்களைக்கொண்டு சகலசாஸ்திரங்களும் சரியானப்ரமாணமென்றே நம்பிஅதில்கூறிய ஸாதனங்களை எவ்விதச்சங்கையின்றிச் சரிவரச்செய்து எல்லோரும் ஸகல சிரேயஸ்ஸையு மடைவார்களாக சுபம்

பத்திராதிபர்.

கங்காவதரண தத்துவம்.

(724-வது பக்கத்தொடர்ச்சி)

सा दिवि प्रमथनाथकुन्तले संभ्रमाद्विमलवीचिमण्डला ।
तर्क्यते स्म चतुरैः सुधाशनैर्मौलिकेव नवमल्लिकामयी ॥

பிரமதகணுதிபனுன சிவபெருமானின் கூந்தலில் பரபரப்போடு ஸ்வச்சங்களான அலைவரிசைகளுடன் விழுகிற கங்கையைப் பார்த்து, சமர்த்தர்களான தேவர்கள், புதிய மல்லிகைப்பூக்க ளால் தொடுக்கப்பட்ட மாலையோவென ஊஹித்தனர்.

இவ்விதம் 39-முதல் 45-ச்லோகம் வரையில் வெகு சமத் காரமாய் கங்காபதனத்தை வர்ணித்து கவி, பிரகிருதத்தைத் தொடங்குகிறார்.

केयमार्द्रयति मस्तकं गुरोः तद्ग्रसेय निखिलाममूमिति ।
किञ्चिदुच्छ्रितकरे गजानने हुंकृतान्यकृत सत्रपं शिवः ॥
वीचिमारुतवितीर्णपारणामांसलाः शिवकपर्दिपन्नगाः ।
संप्रसार्य फणमापद स्ततः संररक्षु रमृतांशुरेखिकाम् ॥
अप्रतर्क्यमसमीक्षितावधिं तं कपर्दवलयं पिनाकिनः ।
आपगा दिविषदा मवाङ्मुखी पन्नगीव कलशं समाविशत् ॥

நமது பிதாவின் சிரஸ்ஸை யாரிவள் நனைக்கிறுள், இவளைப் பூரா. வாகவும் விழுங்குவேனென்று—யானைமுகன் சிறிது துதிக்கை யைத் தூக்கும்போது சிவபெருமான் லஜ்ஜையோடு ஹூங்காரஞ் செய்தார்.

அலைக்காற்றைப் புசித்துப் பெருத்தவைகளான, ஈச்வரனு டைய சடைகளிலுள்ள ஸர்ப்பங்கள் படங்களை விரித்துக்கொண்டு அச்சங்கடமான நிலைமையிலிருந்து, சந்திரகலையை ரக்ஷித்தன. ஊஹிக்கமுடியாததும், காணமுடியாத எல்லையையுடையதுமான பிநாகபாணியின் ஜடா மண்டலத்தில் கீழ்முகமாக விழுகிற தேவ கங்கையானவள் நாகம் கலசத்தில் நுழைவதுபோல் நுழைந்தாள்.

அப்பரமசிவனின் ஜடாமண்டல குகையின் நடுவில்விழுந்த கங்கையின்பெரிய அலைகளில்சிறிதுகூட सत्क्रिया इव कृतघ्नगोचराः விச்வாஸங்கெட்டவர்களுக்குச் செய்யப்பட்ட உபகாரங்கள்போல் காணப்படவில்லை. சிவபெருமானின் தலையில்விழுந்து அடிக்கடி பிரமங்கொண்டு கங்கை திரும்பமுடியாதவளானுள். அதுவும் நியாயந்தான்; பரமாத்மாவினிடம் லயப்படுகிறவர் திரும்புவது

உண்டோ? ஏற்கெனவே வேதஸேதுவால் கட்டுண்டு நிர்மலங்களான தீர்த்தங்களால் பகவானுக்கு அபிஷேகம் செய்ததாலாகிய புண்ணியங்களால் அக்கணத்திலேயே அக் கங்காதேவி லயமானாள். முக்கண்ணனின் லலாடமத்தியிலுள்ள நேத்திராக்கினியால் சூடுண்ட ஜடைகளில்விழுந்த கங்காதரங்கங்கள் சிரமப்பட்டு வேர்வைமாத்திரமான அளவாயிருந்தன. பக்கத்தில் நந்திதேவர் அணுகி, கார்யம் ஆகிவிட்டது என்று வணக்கத்துடன் அறிவிக்கவே, இடதுகையால் உதரப்பட்ட சடைகளை ஸர்ப்பங்களால் சங்கரபெருமான் கட்டினார்.

कपर्दममरापगासलिलसेकसान्द्रीकृतं
विधुन्वति सविभ्रमं पशुपतौ विकीर्णास्ततः ।
काचित्सुरपुरंध्रयः क्वचन यक्षविद्याधराः
काचिच्चपरमर्षयः समवलन्त संमूर्छिताः ॥

பசுபதியானவர் கங்காஜலத்தால் நனைந்தசடையை பரபரப்போடு உதரும்போது, அதிலிருந்து சிதறுண்டுவிழுந்த அப்ஸரஸ்திரீகள் ஓர்புரமும், யக்ஷவித்தியாதரர்கள் ஓர்புரமும், மகரிஷிகள் ஓர் புரமும் மூர்ச்சைகொண்டு புரண்டார்கள்.

ஆகாயத்தில் அலைகளின் கோலாஹலங்களோடு பெண் வருவதைத் தீர்மானித்துக்கொண்டு ஹிமவான், பெண்ணை எவ்வளவுக்குள் காணவந்தானோ; அவ்வளவுக்குள், நீருண்டு மறுபடி கட்டுப்பட்டும் வஸ்திரத்தலைப்பால் உமையால் துடைக்கப் பட்டுமுள்ள சடைகளையே கண்டான். அப்போது பகவானின் உத்தமாங்கமானது, கஷ்டப்படாத ஸர்ப்பங்களோடு கூடினதும் தளர்ச்சி அடையாத சந்திரகலையோடு கூடினதும் புரளாத எருக்க ஸ்தபகாலங்காரத்தையுடையதும், தேவகங்கையால் போடப்பட்ட கற்பகக்குஸுமங்களின் வாஸனையோடு கூடினதுமாகக் காணப்பட்டது.

प्रणमदमरग्रामप्रस्तूयमान महास्तव-
स्तबकितगुहामूलाः कैलासशैलतटास्तदा ।
प्रशमितवियद्गङ्गाहंकारसंकथनादृत-
प्रमथपरिषच्छन्नाः किं नाम नादधतेऽद्भुतम् ॥

அப்போது வணங்கித்துதிக்கின்ற தேவகணங்களின் ஸ்துதிகளால் பிரதித்வனி செய்கின்ற குஹை த்வாரங்களை யுடையவைகளும் கங்கையின் அஹங்காரம் நீங்கினதைச் சொல்வதால் பாராட்டப் பட்ட பிரமதகணங்களால் நிறைந்தவைகளுமான கைலைமலைப் பிரதேசங்கள், எவ்விதமான ஆச்சர்யத்தைத்தான் தரிக்கவில்லை.

ஐந்தாவது ஸர்க்கதத்துவம் முற்றிற்று.

காசிப்ரவேசம் என்ற ஆருவது ஸர்க்க தத்துவம்

ततो जटाभिर्गिरिशस्य पीते तावत्यपि स्रोतसि देवसिन्धोः ।
भगीरथोऽपि प्रमथैःसहैत्र विसिस्मिये प्रागथ विव्यथे च ॥

பிறகு தேவகங்கையின் அவ்வளவு பிரவாகமும் சிவபெருமானின் சடைகளால் குடிக்கப்பட்டபோது, பிரமதகணங்களோடு கூடமுதலில் பகீரதன் ஆச்சர்யப்பட்டானுயினும் வருத்தம் கொண்டான்.

விரிஞ்சனையும் சந்தோஷிக்கச்செய்தேன். சம்புவின் பிரஸாதத்தையும் பெற்றேன். கங்கையையும் அடைந்தேன். இவைகளால் என்னபயனேற்பட்டது? எனெனில் ஜடாமண்டலத்தை ஆராதிக்கவேண்டும் என்பதை அறியாமல் இருந்துவிட்டேன் ஸந்தியாகாலங்களில் பொன்னம்பலத்தரசன் நடனம்புரியும்போது அவருடைய தலையிலிருந்து ஒருஜடை சிதறிவிழுந்தால் அப்போது பிரளயகாலத்தின் முடிவில் பிரவஹிக்கின்ற ஏழு கடல்களும் அந்தஜடைக்கு ஈடுகொடுக்காமல் எங்கேயோபோய் விடும். கங்கையினிடம் ஸல்லாபஞ்செய்தும், அவளையும் பூமியில் இறங்கச்செய்தும், காரியசித்திபெறாததால் வெட்கமடைந்த நான் மறுபடியும் அவளை ஜீவிக்கச்செய்யவே யத்தனஞ்செய்யப் போகிறேன். பகீரதன் இவ்விதம் சிறிது நிர்வேதங்கொண்டாலும் உடனேயே மறுபடியும் தைர்யங்கொண்டான். இவ்வாறு சமாதானங்கொண்டது ஒரு குணமல்ல? எனெனில் அவனுக்கு ஸ்வபாவமான தைர்யகுணம் சிறிது கலங்கிற்றே. இதுதான் தோஷர். மறுபடியும் ஆகாயகங்கையை வரவழிப்பேன் மற்றொரு கங்கையையாவது சம்பாதிப்பேன், தவத்தால் சாதிக்கக்கூடாத

கார்யமொன்றுண்டா என்ன? என்று யோசித்து அவன் சந்திர சூடாமணியையே ஆராதிக்கலானான். முன்போலவே அவன் அவஸரப்படாமல் வாக்குகளால் சிவபெருமானை சந்தோஷப் படுத்தினான்.

(आद्यं विदुः साधनमर्थसिद्धेः असंभ्रमः कार्यविपर्ययेऽपि)

கார்யத்திற்கு இடையூறு நேரிட்டாலும் தயங்காமலிருப்பதே கார்யசித்திக்கு முதலாவது சாதனமென்று பெரியோர் அறிகின்றனர்.

कल्पावसानेषु चतुर्दशापि जगन्ति यत्र त्वयिसंविशन्ति ।
तवैकवेधोगृहदीर्धिकेयं लीना वराकी यदि कास्तुतिस्ते ॥

பிரளயகாலத்தின் முடிவில் பதினான்கு உலகங்களும் யாதொரு உம்மிடம் பிரவேசிக்கின்றனவோ அவைகளில் ஒரு பிரம்ம தேவரின் வீட்டுவாய்க்கால்போன்ற இந்த வராகியான கங்கை மறைந்துவிட்டாள் என்றால் இதுஒரு ஸ்தோத்திரமாகுமா?

இவ்வாறு 9-முதல் 13-ச்லோகங்களால் பகவானைத் துதித்து சடைகளுக்கு, கவி நமஸ்காரஞ்செய்து துதிக்கிறார்.

अभ्यर्थये त्वामथवा न गङ्गां कस्त्वं गृहीतुं पुनरुज्झितुं वा ।
स्तोष्यामि ताएव जटास्त्वदीया याभिर्निपीता कणवन्नदीसा ॥
जटानमोवश्शिरसंप्ररुढां रुध्वा पिपासामियतीं स्थिताभिः ।
युष्माभिरालिह्यत नान्तिकेऽपि दिष्ट्या पयोभण्डनिभोऽयमिन्दुः ॥
जटाललाटानलतापितानां पानोदकं किंनुवियन्नदीवः ।
यच्चन्यगीर्यन्त पदेपदेऽपि पयांसि तस्याः साकेमूपदंशः ॥
पीतं पयो बह्विति मा बिभीत भविष्यथे स्वस्थतराः पुरेव ।
चण्डीश मत्त भ्रमणेन यूयं सद्यः समुद्रान्तजलादिनान्ते ॥

இல்லாவிடில் உம்மை நான் வேண்டிக்கொள்ளவில்லை; கங்கையை கிரஹிக்கவோ, விடவோ, நீர்யார்? எவைகளால் ஒரு திவிலையைப் போல் கங்கை பானம்செய்யப்பட்டதோ; அந்த உமது ஜடைகளையே வேண்டிக்கொள்கிறேன். ஜடைகளே? உங்களுக்கு

நமஸ்காரம். வெகுநாளாக ஏற்பட்டிருந்த இவ்வளவு தாகத்தையும் அடக்கிக்கொண்டிருந்த உங்களால், பக்கத்திலிருந்தும் தெய்வச் செயலாய் பாலாடைபோன்ற சந்திரன் ருசிபார்க்கப்படவில்லை. ஜடைகளே? நெற்றிக்கண்ணின் அக்கினியால் சூடுண்ட உங் களுக்கு இந்த ஆகாயகங்கை தாஹவிடாய் தீர்க்கத்தக்க நீரா என்ன? அடிக்கடி சிதறி விழுகின்ற அக் கங்கையின் நீர்த்துளிகள் (உபதம்சம்) ஊறுகாய் நிலைமைக்குக்கூடத் தக்கதாஎன்ன? ஜலம் யாவும் அருந்தப்பட்டதென்று பயப்படாதீர்கள். முன்போல் சுகமாகவே இருப்பீர்கள். ஸாயங்காலத்தில் நடராஜன் சண்டி யோடு போட்டிபோட்டுக்கொண்டு ஆடுவதால் உடனேஜலத்தைக் கக்கிவிடுவீர்கள்.

भक्तार्पिताभिःकियतीभिरद्भिः कालोमहान्येन कपर्दनीतः ।
सत्वं समासाद्यच तावदम्बु भूयोऽपि किं प्रागिवभिक्षुकोऽभूः ॥

ஓய் சடைமுடியே! பக்தர்களால் கொடுக்கப்பட்ட எவ்வளவோ தீர்த்தங்களால் காலங்கழித்த நீ அவ்வளவு நீரையுமடைந்து மறுபடியும் முன்போல் பிச்சைக்காரனுனாய்.

इत्थं चमत्कारतरङ्गिताभिस्तुतोष तस्य स्तुतिभिर्महेशः ।
साहित्यमर्मावगमे क्षमेत सर्वज्ञमीशं तमृते परः कः ॥

இவ்விதம் சமத்காரம் மேலிட்ட அவனுடைய வசனங்களால் பரமசிவன், சந்தோஷித்தார். ஸர்வக்ஞனை அந்த ஈச்வரனைத் தவிர ஸாஹித்தியத்தின் ரஹஸ்யத்தையறிவதில் யார் வல்லவன்?

கங்கையை விட்டுவிடுவதற்காக வணங்குவது என்பதையே அறியாதிருந்த சிரஸ்ஸை சிவபெருமான் வணங்கச்செய்தார். பக்தர்களை ரக்ஷிப்பதாகிற விரதத்தில் தீக்ஷை கொண்டவர்களுக்குத் தனது கௌரவத்தில் ஆழ்ந்த அபிமானம் வெகு தூரத்திலே சென்றுவிடுகிறது. முதலில் கங்காதேவியின் கர்வமான மொழி களை யாதொரு தேவர்கள் கேட்டனரோ; அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, வெட்கப்பட்டவள்போல் அவள் தலை கீழாக ஆழ்ந்ததான பிந்துஸரஸ்ஸில் விழுந்தாள். சிறிது அசைந்த சந்திரமௌளியின் சடைமுடியினின்று பூமியில் விழுகின்ற கங்கா தேவியை ஆகாயசாரிகளான தேவர்கள் தூரத்திலிருந்து தும்பப் பூமாலை தொங்குவதாக எண்ணினர்.

அந்த பிந்துஸாஸ்ஸில் விழுந்த கங்காதேவி எழுவிதமாகப் பெருகலானாள். கீழ்திக்கில் மூன்று நதிகளாயும் மேற்கு திசையில் மூன்று நதிகளாயும் பெருகலானாள். மற்றொருநதியாக பகீரதனைப் பின்தொடர்ந்தாள். பகீரதன் பகவானை வணங்கி விடைபெற்றுத் தேரில் ஏறி முன் சென்றான். உருவத்தோடுகூடின அவனது கீர்த்திபோல் கங்கை பின் தொடர்ந்தாள்,

பிறகு இமயமலையிலிருந்து பூமியில் இறங்கி மெதுவாக பெருகிக்கொண்டு ஜஹ்னுவின் யாகத்தைப் பார்க்க விரும்பினவள்போல் அவருடைய ஆச்ரமத்துக்கு சமீபம் சென்றாள். அவள் பரமசிவனின் சடையில் வஸித்ததால், தக்ஷயாகத்வம்ஸகரான அச் சிவ பெருமானின் ஸ்வபாவத்தைத் தழுவினவள் போல் அவருடைய யாகசாலையை மூழ்கச்செய்தாள்.

पुरापतन्तीमुकुरे पुरारेर्लेभे फलं या किल दुर्विनीतेः ।
भूयोऽपि सैवापचकार जह्नोः कुतःप्रकृत्या कुटिलोपशाम्येत् ॥

பரமசிவனின் சடைமுடியில் விழுந்து யாதொருவள் வணக்கமில்லாமையின் பலனை அடைந்தாளோ; அவளே மறுபடியும் ஜஹ்னு மகரிஷிக்கு அபசாரஞ்செய்யலானாள். இயற்கையாக குடிலஸ்வ பாவமுள்ளவள் என் அடக்கத்தை அடைவாள்.

வெகு விரைவாகப் பெருகுகின்ற யாதொரு கங்கையை சிவ பெருமான் கிரஹித்துக்கொண்டாரோ; அக் கங்கையை விளையாட்டாகவே ஜஹ்னுமகரிஷி பானஞ்செய்துவிட்டார். பரமசிவனை அடைந்தவர்கள் அவனைக்காட்டிலும் சக்திபெற்றவர்களாகின்றனரல்லவோ.

க்ஷத்திரியகுலத்துதித்த முனிவர் எங்கே? சிவபெருமானின் சடைமுடியால் தரிக்கப்படும் கங்காதேவி எங்கே? இந்தமுனிவரால் அக் கங்கையே கணநேரத்தில் குடிக்கப்பட்டது என்றால் தவத்தின் மகிமை யாரால் அடையக்கூடும்?

राजर्षिरेको विचकर्षगङ्गां अन्यःपुनस्तां कबलीचकार ।
ब्रह्मर्षिभिर्धिग्धिगितः परं वा सन्यस्यतां किंनुतपोऽभिमानः ॥

ஒருராஜரிஷி கங்கையை இழுத்துக்கொண்டு வந்தான். மற்ற ஒரு ராஜரிஷியோ அவளை விழுங்கிவிட்டான். பிராம்மணர்களை நிந்திக்கவே வேண்டும் இனியாவது அவர்களால் ஸன்யாஸாசிரமம்

ஸ்வீகரிக்கப்படட்டும் தவஞ்செய்கிறோம் என்ற அபிமானம் என்ன வேண்டும்? பிறகு பகீரதன், 'இவள் உமது கன்னிகை ஆகப்போகிறாள் தாங்கள் விட்டுவிடவேண்டும்; என்று வேண்டவே அம் முனிவர் காதுவழியாக அவளை வெளியில் விட்டார். முதலில் தேரில் ஏரிக்கொண்ட பகீரதனைப் பின் தொடர்ந்து கங்காதேவி சென்றாள்.

विन्ध्यो गिरिः कुम्भजकोपभीतो गङ्गाच जह्नुग्लपितावलेपा ।
शङ्केसमानव्यसनाविमौ समीयतुर्द्वौ सविधेऽथकाश्याः ॥

அகத்தியமா முனிவரின் கோபத்திற்கு பயந்த விந்தியமலையும் ஜஹ்னுமஹரிஷியால் அடக்கப்பட்ட கர்வத்தையுடைய கங்கா தேவியும், ஆகிய இருவரும் துல்யமான வியஸனம் அடைந்தவர்களென்று சங்கிக்கிறேன். அவ்விருவரும் காசியின் சமீபத்தில் வந்தார்கள். அந்த கங்காதேவி கர்வத்தோடு கூடினகதியை விட்டுவிட்டு பக்தனான பகீரதனை முன்னிட்டு பக்தியோடு விச்வநாதரின் சமீபத்தில் பிரவகித்தாள். ஏனெனில் அவள் அவரது ஜடையயின் மகிமையை அறிந்தவள்.

याम‌भ्युपेताः परया समृध्या भिक्षाशिनो दिग्वसना भवन्ति ।
यामावसन्तो भवबन्धमुक्त्यै देहार्थएवा कलयान्ति दारान् ॥

भस्माङ्गरागाः शिरसः कपालं पात्राय माल्यायच जालमस्थ्नाम् ।
जनायदीयाः पुनराददानास्तनुं त्यजन्तीव नतुत्यजान्ति ॥

எந்தக் காசி நகரிலுள்ளவர்கள் அஷ்டசித்திகளும் பெற்றும் பிக்ஷுகர்களாயும் திகம்பராளாயுமாகின்றனரோ. ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபடுவதற்காக யாதொரு காசிநகரில் வஸிப்பவர்வள் தனது பாதி சரீரத்திலேயே மனைவியை அடைகிறார்களோ? எந்த நகரத்தில் மரித்தவர்கள் மறுபடியும் விபூதியணிந்துகொண்டும் பாத்திரத்திற்கு பிரம்மாவின் மண்டையும், மாலைக்காக அஸ்திக் கூட்டத்தையும் எடுத்துக்கொண்டும், சரீரத்தை விட்டுவிடுகிறவர்கள்போலவே கூறப்பட்டாலும் சரீரத்தைவிட்டுவிடுகிறதேஇல்லை.

இந்தச்லோகங்களால் அங்கே சரீரத்தியாகஞ்செய்பவர்கள் பரமசிவ ஸாரூப்பியத்தைப் பெறுகிறார்கள் என்று கருத்து வெளியாகிறது.

सा तत्र सिन्धुर्विशति प्रसन्ना सेव प्रसन्नाश्च गिरः कवीनाम् ।
गभीरतास्वादिमवेगमूलां स्पर्धामबध्नन्नितरेतरेण ॥

அங்கு கங்கை பிரவேசிக்கும்போது தெளிவாய் ஆனுள். கவிகளின் வாக்குகளும் அந்த கங்கைபோல் தெளிவாயுள்ளன; அவைகள் ஒருவருக்கொருவர் கம்பீரமான (ஆழ்ந்த) பாகத்தையறியும் வேகமாகிற மூலத்தையுடைய பொருமையை வைத்தனவைகள் போல கங்காதேவியானவள் தான்பெருகிவரும்போது அனேக ரிஷிகளின் ஆச்ரமங்களை மூழ்கச்செய்யததாலுண்டான பாபம் நீங்குவதற்குப்போல மணிகர்ணிகையில் மூழ்கினுள். பிறகு நான்கு ச்லோகங்களால்,। கங்காதீர்த்த பானம் பண்ணுகின்றவா களின் சிவ ஸாரூப்பியத்தை வர்ணித்து,

सा वेगादथ मणिकर्णिका जलान्तः संपातप्रतिहतिसंभवैर्द्युसिन्धुः ।
व्याकीर्णैर्नवकुसुमैरिवाम्बुलेशै र्विश्वेशं विनयपरिष्कृता ववन्दे ॥

பிறகு அந்த கங்காதேவியானவள் வியாபிக்கின்ற புதிய புஷ்பங்கள்போன்ற வேகமாய் மணிகர்ணிகா ஜலத்தில் விழுந்து அடிபட்டுக்கிளம்பின தீர்த்தத்திவிலைகளுடன் வணக்கமாய் விச்வநாதரை வணங்கினுள்.

स्वच्छन्द्प्रचरद्भगीरथरथक्रेङ्कारधाराश्रव
प्रत्युद्यन्मुनिलोकलोचनपुटी निर्वेदसर्वङ्कषैः ।
स्रोतोभिर्घनसारसान्द्रशिशिरैः खर्लोककल्लोलिनी
तामालिम्पदिवेन्दुचूडनयनज्वालाजटालां पुरीम् ॥

ஆகாய கங்கையானவள், இஷ்டம்போல் செல்கிற பகீரதனின் தேரின் க்ரேங்காரதாராத்வனியைக் கேட்டுவந்த முனிவர்களின் நேத்திரங்களுக்கு ஆநந்தத்தைத் தருகின்றவைகளும், கற்பூரம் போல் மிகக்குளிர்ந்தவைகளுமான பிரவாகங்களால் சந்திரசூடனின்நேத்திராக்கினியால் வியாபிக்கப்பட்ட காசிமாநகரை சாந்தப்படுத்துகிறவள்போல் பெருகினுள்.

காசிப்ரவேசம் என்ற ஆறுவதுஸர்க்கத்தின்தத்துவம் முற்றிற்று.

K. V. சுப்பிரமணியசாஸ்திரி.

காயத்திரீஜப விதி.

காயத்ரீஜபமானது ஆபஸ்தம்பதர்ம ஸூத்திரத்தில் 1-வது பிரச்னம் 26-வது கண்டத்திலும் 27-வது கண்டத்திலும் மித்யா தீதப் பிராயச்சித்தப் பிரகாரணத்தில் விதிக்கப்படுகிறது. "மித்யா தீதப்பிராயச்சித்தம்" நியமம் தவறிச்செய்த அத்தியயனம் மித்தி யாத்தியயனம். அது தோஷம். அந்ததோஷம் விலகுவதற்காகப் பிராயச்சித்தம் செய்யவேண்டும்,, என்று ஆரம்பித்து அந்த பிராயச்சித்தம் ஆறுவிதமாகக் கூறப்படுகின்றது. அவற்றுள் முதலாவது—

संवत्सरमाचार्यहिते वर्तमानो वाचं यच्चेत् स्वाध्याय एवोत्सृजमानो वाचं आचार्ये आचार्यदारे वा भिक्षाचर्ये च ॥

"ஒருவருஷம் பூராவும் ஆசாரியருக்குஹிதமான கார்யத்தையே செய்துகொண்டு மௌனமாய்(பேசாமல்)இருக்கவேணும். ஆனால் அத்தியயனதிகளில் மாத்திரம் வாயைத்திறக்கலாம். அதாவது அத்தியயனத்திற்காகவும், ஆசாரியரிடத்திலோ-அல்லது ஆசார்ய பத்தினியினிடத்திலோ கார்யங்களை யறிவிப்பதற்காகவும், பிக்ஷா டனத்தில் பவதிபிக்ஷாம்தேஹி என்று சொல்லுவதற்காகவும் வாயைத்திறக்கலாம். இவைகளைத்தவிர மற்றவிடங்களில் பேசவே கூடாது. இப்படி இருப்பது ஒரு பிராயச்சித்தமாகும். பிக்ஷாட னத்தை இங்கு கூறியதிலிருந்து இந்தப்பிராயச்சித்தம் ஸமாவர்த் தனம் செய்யாத பிரம்மசாரிகளுக்கென்று தெரிகிறது.

एवमन्येष्वपि दोषवत्स्वपतनीयेषु । उत्तराणि यानि वक्ष्यामः ॥

"நியமம் தவறிசெய்த அத்தியயனதோஷத்திற்கு கீழ்க்கூறப் பட்டது பிராயச்சமாவதுபோல் மேல் சொல்லப்போகிறவைகளும் பதனீய பாபந்தவிர மற்ற தோஷமுள்ள கார்யங்களிலும் மித்தி யாத்தியயனத்திலும் பிராயச்சித்தமாகும்,, என்று மற்ற ஐந்து விதப்பிராயச்சித்தங்களை விதிப்பதாகப்] பிரதிக்ஞை செய்து கொண்டு 2-வது பிராயச்சித்தப் பிரகாரத்தை கூறுகின்றார்.—

काममन्युभ्यां वा जुहुयात्कामोऽकार्षीन्मन्युरकार्षीदिति ।

'காம-என்றும்மன்யுஎன்றுந்தொடங்கியுள்ள மந்திரங்களால் ஆஜ்ய (நெய்)ஹோமம் செய்தாலும் செய்யலாம்" என்று. 3வது जपेद्वा அல்லது அந்தமந்திரங்களை ஜபித்தாலும் ஜபிக்கலாம்,என்று கூறப் பட்டது. அந்த மந்திரம் ஸூத்திரத்தில் படிக்கப்பட்டபடிகாண்க எவ்வளவுதடவை ஹோமம். அல்லது ஜபம் செய்யப்படவேண்டு மென்றால் தோஷதாரதம்யத்திற்கேற்றவாறு ஹோம ஸங்கியை யும், ஜபஸங்கியையும் வைத்துக்கொள்ளவேண்டும். 4-வது பிரா யச்சித்தப்பிரகாரம்—

पर्वणि वा तिलभक्ष उपोष्य वा श्वोभूत उदकमुपस्पृश्य सावित्रीं प्राणायामशः सहस्रकृत्व आवर्तयेत् । अप्राणायामशोवा

"அல்லது பௌர்ணமாஸியிலாவது அமாவாஸ்யையிலாவது எள்ளைமாத்திரம் புஜித்துவிட்டாவது, அல்லது சுத்த உபவாஸமா யாவது இருந்து தீர்த்தத்தில் ஸ்னானம்செய்து (ஸங்கல்பித்துக் கொண்டு) பிராணாயாமம் செய்து (மூச்சையடக்கி) எவ்வளவு தடவை காயத்திரீயை ஜபிக்கமுடியுமோ அவ்வளவு தடவை செய்து மூச்சைவிட்டு மறுபடியும் மூச்சை யடக்கிக்கொண்டு ஜபிக்கவேண்டும். இப்படி ஆயிரம் ஆவிருத்தி காயத்திரீஜபம் ஆகும்வரை மூச்சையடக்கி யடக்கிச்செய்யவேண்டும். அல்லது மூச்சையடைக்காமல் ஜபத்தைமாத்திரம் ஆயிரம் ஆவிருத்தி செய்யலாம் என்று கூறப்பட்டது. 5—வது பிரகாரம்—

श्रावण्यां पौर्णमास्यां तिलभक्ष उपोष्य श्वो वा भूतेमहानदमुदक - मुपस्पृश्य सावित्र्या समित्सहस्रमादध्यात् जपेद्वा ।

'அல்லது சிராவணீபௌர்ணமியில்எள்ளைமாத்திரம் புஜித்து, உபா வாஸமிருந்து மறுநாள் மலையிலுண்டாகி ஸமுத்திரத்தில்போய் விழும் மஹாநதி தீர்த்தத்தில் ஸ்னானம்செய்து (ஸங்கற்பித்து) புரசு, அரசு முதலிய யாகார்ஹமான விருக்ஷங்களின் ஆயிரம் ஸமித்துக்களை காயத்திரியை உச்சரித்துக்கொண்டு லௌகிகாக் கினியில் போடவேண்டும்,அல்லது ஆயிரத்தெட்டா விருத்திஜபித் தாலும் ஜபிக்கலாம் என்று கூறப்பட்டது. 6—வது பிரகாரம்—

इष्टियज्ञक्रतून्वा पवित्रार्थी नाहरेत् ॥

"அல்லது சுத்திக்காகவென்று விதிக்கப்பட்டுள்ள மிருகாரேஷ்டி, மித்திரவிந்தேஷ்டி, முதலிய இஷ்டிகளையாவது, அக்னிஷ்டோமம்

முதலிய யாகங்களையாவது செய்யவேண்டும்,, என்று விதிக்கப் பட்டது. இவ்விதம் ஆறுவிதமான பிராயச்சித்தங்கள் விதிக்கப் பட்டன. இந்த ஆறுகளுள் சில இலகுவாயும், சில பெரிதாயு மிருக்கின்றன. பாபத்திற்கேற்றவாறு கண்டுகொள்ளவேண்டும். அதாவது இலகுவானபாபங்களில் இலகுவான பிராயச்சித்தங் களும், பெரியபாபங்களில் பெரியப் பிராயச்சித்தங்களும் செய்யத் தக்கன. ஆறுவது பிரகாரம் த்ரேதாக்கினியுள்ள கிரகஹஸ்தர் களாற்றான் செய்யக்கூடியது. மத்தியிலுள்ள மற்ற நான்குப் பிரகாரங்கள் எல்லோருக்கும பொதுவாயுள்ளன. இப்பொழுது நாமெடுத்துக்கொண்ட காயத்திரீஜபமென்பது கீழ் கூறப்பட்ட ஆறுபிரகாரங்களுள் 5-வது பிரகாரமாகும். அதில் ஆயிரம் ஸமித் துக்கள் போடுவதே முக்கியம் அந்த பக்ஷத்தை பிரதமோபா கர்மம் செய்யும் பிரம்மசாரிகள் விஷயத்தில் நடத்திவைக்கிறார் கள். துவிதியாத்யுபாகர்மம் செய்யும் பிரம்மசாரிகளோ, கிரஹஸ்தர் களோ ஸமித்துப்போடும் ஸம்பிரதாயத்தைப் பெரும்பாலும் தற் காலத்தில் ஆதரிக்கவில்லை. சிரத்தையுள்ள சிலர் இந்த முக்கிய பக்ஷத்தை நடத்திவருகிறார்கள். பெரும்பாலோர் ஜபத்தையே செய்துவருகிறார்கள். இதில் ஜபம் பிரதானமாயுள்ளது. முதல் நாள் உபவாஸம் மஹாநதீஸ்னானம் அங்கங்களாகும். சிராவண பௌர்ணமியில் எள்ளைமாத்திரம் புஜித்து உபவாஸமிருப்பவர் ஏதோ சிலரே இருப்பார்கள். பெரும்பாலோர் உருதியுடன் உப வாஸமிருப்பதாகத் தெரியவில்லை. உபவாஸ மிருக்கவேண்டு மென்பது அத்தியாவசியகமா யுள்ளதுதான். இங்கு சிலர் "கிணறு தோண்டும்பொழுது சேரும்சேற்றை அதிலிருந்துண்டாகின்ற ஜலத்தால் அலம்பி விடுவதுபோல் உபவாஸ நியமந்தவறியதாலேற் பட்ட அங்கலோப தோஷத்தையும் ஸம்வத்ஸா தோஷங்களோடு காயத்திரீஜப புண்ணியத்தால் விலக்கிவிடலாம் என்று சங்கை கொள்வார். அதுசரியல்ல சேறுஸம்பந்தப்படாமல் கிணறு தோண்டமுடியாது. உபவாஸ நியமபங்கமில்லாமலே காயத்திரீ ஜபம் செய்யமுடியாதெனச் சொல்லலாமா? சொல்லலாகாது. ஆகவே உபவாஸமில்லாமற்போனால் அங்கலோபந்தான்நேரும். அது வாராமல்செய்வது சிலாக்கியமேயாகும். மஹாநதீஸ்னானம் மற்றோர் அங்கம். அது நித்தியஸ்னானம் உஷக்காலத்தில் செய்த தைத்தவிர ஸங்கவகாலத்தில்தனியாக காயத்ரீஜபாங்கமாக ஸ்

கற்பித்துக்கொண்டு செய்யவேண்டியது. காவேரி, தாம்பிர பர்ணி, கோதாவரீ முதலிய மஹாநதீக்கரையில் வஸிக்கும் பாக் கியம்பெற்றவர்களுக்கு இது இலகுவாய்ச்செய்யமுடியும். அந்த பாக்கியமில்லாதவர்கள் சிரமப்பட்டுத்தான் அந்த அங்கத்தைச் செய்யமுடியும் சிரத்தையுடன்சிரமப்படாவிடில் அந்த அங்கம் சரி யாக அனுஷ்டிக்கப்பட்டதாகாது. தற்காலத்தில் பலர் மஹாநதிக் கரையில்வஸித்தும் நித்தியஸ்னனத்தைத்தவிறத் தனியாகக்காயத் திரீ ஜபாங்கமாக ஸ்னனம்செய்ய வேண்டுமென்பதையேதெரிந்து கொள்ளவில்லை. தெரிந்துகொண்டவர்களும் சிரத்தைக்குறைவால் செய்வதில்லை. அது செய்யவேண்டியது அவசியந்தான். பிரதான மாகிய காயத்திரீஜபமோ,மித்தியாத்தியயன தோஷ பரிஹாரத்திற் காகவும், பதநீயபாபம் தவிரமற்ற ஸம்வத்ஸரதோஷ பரிஹாரத் திற்காகவும் பிராயச்சித்தமாகச் செய்யப்படுகிறது. தற்காலத்தில் ஆர்யச்சிறுவர்களும் அத்தியயனம் செய்வது அரிதாய்விட்டது. சிலர் செய்யினும் நியமந்தவறியே செய்கிறுர்களென்பது சொல்ல வேண்டியதில்லை. கௌபீனமும், கடிஸூத்திரமும், இடுப்புவஸ் திரமும், உத்தரீயத்திற்காக கிருஷ்ணஜினமும், மேகலையும், தண்ட மும், அவசியம் தரிக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டபடி எந்த பிரும்மசாரிப்பையன் அவைகளை தரித்துக்கொண்டிருக்கிறுன். எந்தப்பையன் ஸமிதானம் செய்கிறுன். பிக்ஷாசரணம் செய் கிறுன். இவைகளில்லாவிட்டால் புனருபநயன ஸம்ஸ்காரம் செய் விக்கவேண்டுமாம். அங்ஙனமே ஆபஸ்தம்பர்-

अजिनं मेखलां दण्डं भैक्षचर्यं च यस्त्यजेत् ।
पुनस्संस्कारमर्हेत विधिदृष्टेन कर्मणा ॥

"அஜினத்தை (மான்தோலையும்) மேகலையையும் தண்டத்தையும், பிக்ஷாசரணத்தையும், எந்தப்பையன் விட்டுவிடுகிறுனே! அவன் முறைப்படி புனஸ்ஸம்ஸ்காரத்திற்குரியவனுவான்" என்று கூறி யுள்ளார். இவையெல்லாம் ஸம்வதஸர தோஷத்திற்சேர்ந்தது தான். இந்த தோஷங்கள் இலகுவாயுள்ளவைகளல்ல. ஆகவே காயத்திரீஜப மாத்திரத்தினுலேயே விலகக்கூடியவைகளல்ல. பெரிய பிராயச்சித்தத்தையேசெய்து நிவர்த்திக்கக்கூடியவை களாகின்றன. அப்படியிருக்கையில் இந்த காயத்ரீ ஜபத்தை யாவது அதற்குள்ள அங்கங்களோடு செய்யவேண்டியதே தகுதி

யானது. இந்த ஆபஸ்தம்பதர்ம ஸூத்திரம் தவிற மற்றவிடங்களில் இதைப்பற்றிய விபரங்கூறப்படுவதாகக் காணப்படவில்லை. சிராவணீ பௌர்ணமீக்கு மறுதினமே இதை அனுஷ்டிப்பதற்குக் காலம். இந்த ஒரு காலந்தான் கூறப்பட்டிருக்கிறது. வேறு கௌணகாலம் கூறப்படவில்லை. பௌர்ணிமையும், பிரதமையும் பூர்ணமாயிருக்குமானல் அப்பொழுது எவ்வித ஸம்சயத்திற்குமிடமில்லை. பௌர்ணிமையும் பிரதமையும் கண்டதிதியாய் வந்தால் அப்பொழுது அதன் வியாப்தியைப்போதிக்கும் வசனமிருந்தால் அதில் சொல்லும் பிரகாரமாக அனுஷ்டிக்கவேண்டியது உசிதமாகும். அதை விசாரிப்பாம்.

பத்திராதிபர்.

ஸநாதனதர்ம ப்ரசாரம்.

தஞ்சை பிராம்மணர் ஸநாதனதர்ம ஸம்ரக்ஷணஸபை ஆதரவில் 15—8—1931-ல் துவக்கி 6—9—1931-வரையில் ஸ்ரீமான் வாராணசீ யூ. பி. கிருஷ்ணமாசார்யார் அவர்களால் தஞ்சையில் 18-உபன்யாஸங்கள் ஆங்கில பாஷையில் செய்யப்பட்டன. இக்காலத்தில் இப்படிப்பட்ட உபந்யாஸங்கள் அத்தியாவசியம். ஆங்கிலப் படிப்புப்பெற்ற நம்மவர்களுடைய மனதை வேறுவிதமாய் திருப்பமுடியாது. நம் ஸநாதன தர்மவிஷயமாக ஆங்கிலத்தில் ப்ரசாரம் செய்யக்கூடியவர்கள் இவரைப்போல் பலர் தயாராகவேண்டும். அந்தக்கடமை இப்பாதகண்டத்திலுள்ள மடங்களைப்பொறுத்ததாகும். அப்படி தயாரிக்க ஒரு பாடசாலை ஏற்படவேண்டும். பிராம்மணர்களுக்கு ஜீவனோபாயமில்லாத இந்த நாளில் ஆங்கிலப்படிப்புப்பெற்றவர்களுக்கு மாதவாரிபரிசு (Stipend) கொடுத்து அல்லது வேதபாடசாலைகளில் நடப்பதுபோல் சாப்பாடுபோட்டு ஸநாதனதர்ம ப்ரசாரக பாடசாலைகள் ஏற்படுத்தி அதில் தேர்ந்தவர்களுக்கு சம்பளம்கொடுத்து ஜில்லா ஜில்லாவாக நியமிக்கவேண்டும்.

ஸ்ரீமான் கிருஷ்ணமாசார்யார் செய்த உபன்யாசங்களின் சாராம்சம் என்னவென்றால்:—

ஸநாதன தர்மக்கொள்கைகளை ஆராய்ந்து பார்க்குமளவில் அவைகள் பௌதிகாதி சாஸ்திரங்களுக்கு ஒத்திருக்கின்றன வென்றும், அவைகளை அனுஷ்டிப்பதுதான் ஐஹிகாமுஷ்மிகமான நல்ல பலன்களை மானிடர்களுக்குத்தருமென்றும் பௌதிகாதி சாஸ்திரங்களில் தேர்ச்சியடைந்த ஐரோப்பிய சாஸ்திர பண்டிதர் களின் சித்தாந்தங்களைக்கொண்டே நிரூபித்து நம் சாஸ்திரவிதி நிஷேதங்களின் ஸநாதனமான பெருமைகளை ஸ்ரீமான் விளக்கிக் காட்டினார். மேலும் ஜன்மாந்தரங்களுண்டென்று சித்தாந்தப் படுத்தி ஐஹிக விஷயங்களில் கொஞ்சம்கொஞ்சமாய் பற்றை விட்டு மனதை பாரலௌகிக விஷயத்தில் திருப்புவதுதான் மனித ஜன்மமெடுத்த ஜீவன்களின் முக்கிய தினசரிவேலையென்றும் தர்ம விரோதமில்லாமல் ஐஹிக கடமைகளைத்தவறாது செய்ய வேண்டுமென்றும் நோக்கம் பரலோகத்திலேயே இருக்கவேண்டு மென்றும், அதற்கு ஆகாராதிகளில் நியமங்கள் அவசியமென்றும் கேட்டவர்கள் மனதில் பச்சைமரத்தாணிபோல் பதியும்படிசொன் னார். பிந்தின உபன்யாஸங்களில் பரம்பரையை சரிவரக்காப்பாற் றுவது அவசியமென்பதையும் பெண்களை ருதுவாவதற்குமுன் விவாஹம் செய்துகொடுப்பதும் ருதுவான சமீபகாலத்தில் நிஷே கம் செய்வதும் தான்சர்வசாஸ்திர சம்மதமென்றும், சாரதாச் சட்டமும் அனுலோம பிரதிலோம சம்பந்தங்களும் தீங்கை விளைவிக்குமென்றும் மனுஷிய சரீரங்களில் நான்குவித இரத்த மிருப்பதாகவும் சாதுர்வர்ண்யத்தின் உண்மையையும் அதைக் கொண்டு நிர்ணயிக்கலாமென்றும் கூறினார்.

இதர உபன்யாஸங்களில் மூர்த்தி பூஜையின் மஹிமையைப் பற்றியும் நமது கோவில்களில் ஈசுவரனுடைய சாந்நித்ய மேற்படு கிற வழியையும் ஆலயங்களின் அமைப்பையும்பற்றி ப்ரவசனம் செய்தபிறகு கோகுலாஷ்டமி தினத்திலும் மறுநாள் ஸ்ரீ ஜயந்தி தினத்திலும் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மாவின் திவ்விய அவதாரத்தை வர்ணித்து கடைசியாக 6—9—1931-ல் பகவானுடைய லீலைக ளின் உண்மையான தாத்பர்யத்தை எடுத்துக்காட்டி தூய அன்பு

வெள்ளத்தின் ஸ்வரூபத்தையும் ஜீவாத்மா பரமாத்மாவின் ஐக்கியத்தையும் நிரூபித்தார்.

சாரதாசட்ட கண்டன தீர்மானங்கள்.

26—8—1931 இல் தஞ்சை யூனியன் கிளப்மார்ஷ்ஹாலில் ரிடையர்ட் டிஸ்டிரிக்ருரிஜிஸ்டார் மகா-௱-௱-ஸ்ரீ A. V. நாகருஜருவ் B. A. அவர்களின் அக்ராசனத்தின்கீழ் அடியில்கண்ட தீர்மானங்கள் செய்து வைசிராய் முதலியவர்களுக்கு அனுப்பப்பட்டன.

1. இந்துக்களின் மதக் கொள்கைப்படி விவாஹமானது மதசம்பந்தமான ஸம்ஸ்காரமானதால் சாரதாசட்டத்தை பாஸ் செய்ததானது மதவிஷயங்களில் சர்க்கார் பிரவேசிக்கிறதில்லை என்று உறுதியாய்ச்சொன்ன வாக்குதத்தத்திற்கு நேர்விரோதம். ஆகையால் ஷை சட்டத்தை ரத்துசெய்யும் விஷயமாய் கொண்டுவரப்பட்டிருக்கும் மசோதாக்களை ஆதரிக்கும் விஷயத்தில் சர்க்கார் தரப்பில் பூர்ண செல்வாக்கையும் செலுத்தி ஷை வாக்குத்தத்தத்தை நிலைநிறுத்தும்படி வணக்கமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

2. அல்லது, பிராம்மணர்களையும், ருதுவாவதற்கு முன் எந்தஜாதிகளில் பெண்களின் விவாஹம் ஆகவேண்டுமென்று ஏற்பட்டிருக்கிறதோ அந்த ஜாதிகளைமட்டிலுமாவது ஷை சட்ட நிர்ப்பந்தத்திலிருந்து விலக்கவேண்டுமென்றும் ருஜாபஹதூர் G. கிருஷ்ணமாச்சாரியார் முதலியோரால் கொண்டுவரப்பட்டிருக்கிற திருத்த மசோதாக்களை சர்க்கார் மெம்பர்களும் இதர மெம்பர்களும் ஆமோதிக்கும்படிக்கும் பிரார்த்திக்கிறோம்.

தஞ்சைஜில்லா பிராம்மணர் ஸநாதனதர்ம
ஸம்ரக்ஷண ஸபை தஞ்சை.

தஞ்சை ஸ்ரீ கொங்கணேசுவரஸ்வாமி கோவிலில் தஞ்சை ப்ராம்மண ஸபையோரால் காயத்திரீஜபதினத்தை (28-8-1931

ஸநாதன தர்மிகளின் முக்கியதினமாகக் கொண்டாடி அடியில் கண்ட தீர்மானங்கள்செய்து வைசிராய் முதலியவர்களுக்கு அனுப்பப்பட்டன.

1. பரம்பராப்ராப்தமாக ஸம்பிரதாயப்படிக்குள்ள அர்த்தத்தோடு கூடின சுருதிஸ்மிருதி வாக்கியங்களிலும் அவைகள் எந்தவிஷயத்திலும் தவறமாட்டா, முக்காலத்திலும் செலாவணியுள்ளவை யென்பதிலும் பூர்ண நம்பிக்கையே அஸல் ஹிந்து மதம் அல்லது ஸநாதன தர்மமதமாகும். ஐஹிக சமூகசம்பந்தமானவை என்று பிறர் கூறுவதும் நம் கொள்கைப்படி மத சம்பந்தமானதுமான விவாஹாதிவிஷயங்களை சுருதிஸ்மிருதிகளின் ஆஞ்ஞைப்படி நடத்தாவிட்டால் பரமாத்மாவின் தர்சனமும் மோக்ஷமும் சித்திக்காதென்பது ஸநாதன தர்மிகளின் அந்தரங்கமான கொள்கையாகும்.

(2) ஆகலால் சாரதாசட்டமானது எங்கள் ஸநாதன தர்ம மதத்தில் அக்ரமமாய் பிரவேசித்திருக்கிறதென்பது நிச்சயம். ஷை சாரதாசட்டத்தை ரத்து செய்யவேண்டியதின் பொருட்டு கொண்டுவரப்பட்டிருக்கிற மசோதாக்களை சர்க்காரும் லெஜிஸ்லேடிவ் அசெம்பிளி மெம்பர்களும் ஆமோதிக்கும்படி பிரார்த்திக்கிறோம்.

ஜி. வி. லக்ஷ்மன சாஸ்திரிகள்.
கார்யதர்சி

சாரதாசட்டக் கொடுமை.

ஊஷார்! ஊஷார்!!

பிராம்மண ஆஸ்திகர்களுக்கு ஓர்முக்கிய அறிவிப்பு.

சாரதாச்சட்டம் என்னும் விஷப்பாம்பு இலகுவில் சாகிறதாயில்லை. ஏதோ பல நெருக்கடி கஷ்டங்களினால் மட்டில் புத்தை விட்டு வெளிக்கிளம்பாமலிருந்தது தவிர வேறல்ல. பலர் கைகட்டிக்கொண்டு சும்மாவிருந்து அது செத்துவிட்டதாக மனப்பால் குடித்து வந்தார்கள். இப்போது சமீபகாலத்தில் பம்பாய் ராஜ

தானியைச்சேர்ந்த ஹைதராபாத்திலும் கல்கத்தாவிலும் நடந்த சம்பவங்களை பத்திரிகைகளில் ஆஸ்திக சினேகிதர்கள் பார்த்திருப்பார்கள்,

1. ஹைதராபாத்தில் நடந்த கேஸில் பெற்றோருக்கு 20 ரூ. அபராதமும், புரோகிதருக்கும் மாப்பிள்ளைக்கும் 10ரூ அபராதமும் விதிக்கப்பட்டது.

2. கல்கத்தாவில் சாரதாச் சட்டத்துக்கு விரோதமாய் சாஸ்திரப்படி நடந்த விவாஹத்தில் சம்பந்தப்பட்டவர்களுக்கு 5-நாள் காவலும் 200 ரூ அபராதமும் விதிக்கப்பட்டிருக்கிறது.

இனி வரவர சரீர தண்டனையும் அபராதமும் அதிகரிக்கும்,

ஆஸ்திகர்களே! பாம்பு வெளிக்கிளம்பி உலாவி படமெடுத்தாடத்தொடங்கிவிட்டது. சீர்திருத்தக்காரர்களென்று சொல்லிக்கொண்டு சீமைக்குலைக்கத் தலைப்பட்டிருக்கிற சமாஜக்காரர்களும் பின்னும் சில மூக்கறையர்களும் நம்முடைய குழந்தைகளின் க்ஷேமத்திற்காக அவதாரமெடுத்திருப்பவர்கள்போலநடித்துக்கொண்டு ஆங்காங்கு கூட்டங்கூடி மகிடிவாசித்து பாம்பை ஆட்டிவைத்து வருகிறார்கள். நம்மில் ஜாதிகெட்டவர்கள் நம்மைப்பார்த்து கைதட்டி சிரிக்கும்படியாயிருக்கிறது.

மேல்நாட்டாருடனும் அதிகாரிகளுடனும் கலந்து பேசும்படியான சந்தர்ப்பங்கள் இச்சிறுபான்மையாரான நம் விரோதிகளுக்கு அடிக்கடி கிடைப்பதாலும் அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நாம் அவைதிகமென்று தள்ளுவதாலும் பிரதிவாதி ஆஜராகாத வியாச்சியத்தில் வாதிக்கு எப்படி பிராதுப்படி தீர்ப்பாகுமோ அப்படி நமக்கு விரோதமான சட்டங்கள் ஏற்படுகின்றன. கூட்டங்கூடிக்கதறவேண்டுமென்பதை எல்லோரும் உணரவேண்டும்.

சமீபத்தில் வருகிற ஸெப்டம்பர்ம்ீ 7உயில் கூடும் டில்லி சட்டசபையில் சாரதாச்சட்டரத்து மசோதாக்களும் திருத்தல்மசோதாக்களும் ஆலோசனைக்கு வருகின்றன. ஆகையால் அது சம்மந்தமாக கும்பகோணம் மஹா சபையால் வெளியிடப்பட்டிருக்கிற படிக்கும் இந்த ஸபையிலிருந்து அடிக்கடி வற்புறுத்தப்பட்டிருக்கிறபடிக்கும் கிராமந்தோறும் கூட்டங்கள்கூடி சாரதாச்சட்டத்தைமறுபடியும் கண்டித்து அது சாகிறவரையில் தலை கிளப்ப

வொட்டாமல் அடித்துக்கொண்டேயிருக்கவேண்டியது அவசிய மாயிருக்கிறது.

இதற்காக நாம் இன்றைக்கே செய்யவேண்டிய வேலையாவது

1. வருகிற புதன்கிழமையில் ருக்வேதி சிராவணமும் வியா ழக்கிழமைதனம் யஜுர்வேதி சிராவணமும் வெள்ளிக்கிழமை காயத்ரீ ஜபமும் வருகின்றன.

ஷை விசேஷ தினங்களிலும் வேறு சவுகர்யமான நாட்களி லும் ஒரு வாரத்திற்குள்ளாக 10 பேர்கள் கூடினாலும் அந்தக் கூட்டத்தில் ஷை சட்டத்தைக்கண்டித்து ராஜாபகதூர் G. கிருஷ் ணமாசார்யார் முதலிய பிரபுக்கள் ஷை சட்டாத்து விஷயமாய் பிராம்மண சமூகத்தை ஷை சட்டத்திலிருந்து விலக்கவேண்டிய விஷயமாயும் பின்னும் பலவிதமாயும் கொண்டுவரும் மசோதாக் களை ஆமோதித்து தீர்மானங்கள்செய்து வைசிராய் (Private secretary to the Viceroy New Delhi) அவர்களுக்கும். ஹோம்மெம்பர் (Home member to the Government of India) அவர்களுக்கும், சட்டசபைபிரஸிடண்டு (President Legislative Assembly New Delhi) அவர்களுக்கும், ராஜாபக தூர் G. கிருஷ்ணமாசாரியார் (Raja Bahadur G. Krishnamachariar Vani Vilas Brodies Road Mylapore) அவர்களுக் கும் அந்தத் தீர்மானங்களை அனுப்பவேண்டியது அவசியம். வாயுள்ள பிள்ளைதான் பிழைக்கும், உறக்கக் கத்துகிறவன் பேச்சுதான் காதில் விழும். எத்தனைக்கெத்தனை ஜாஸ்தி மஹஜர் போகிறதோ அதற்குத்தக்கபடித்தான் தற்கால அரசியல் முறை யில் கவனிக்கப்படுமாதலால் பிரதியக்கிராமத்திலும் தவறாமல் கூக்குரலிடவேண்டும். சென்ற மே மாதம் தஞ்சை சம்மேளனத் தில் செய்யப்பட்ட தீர்மானங்களின் இங்கிலீஷ் பிரதியொன்றும், தமிழ்பிரதியொன்றும் இத்துடனனுப்பப்பட்டிருக்கிறது. அவைக ளில் முதல் மூன்று தீர்மானங்களையும் முக்கியமாய் மூன்றாவது தீர் மானத்தையும்உங்கள் தீர்மானமாகச்செய்து மேலே கண்ட அதி காரிகளுக்கும் பத்திரிகைகளுக்கும் தந்தி மூலமாயும்,டைப்செய்து தபால் மூலமாயும் காலதாமதமன்னியில் அனுப்பவேண்டும். இப் பொழுதுங்கூட அலட்சியமாயிருக்கவேண்டாம்.

தஞ்சைஜில்லா ப்ராம்மண ஸநாதன தர்மஸம்ரக்ஷண ஸபை.

ஐயா, திருச்சிஸ்ரீரங்கம் ஜாதி ஹிந்துக்களடங்கிய பெருங்கூட்டமொன்று 2—9—31 புதன்கிழமை மாலை 6-30-மணிக்கு திருச்சி இ. ஆர். ஹைஸ்கூலில் (பழைய ஹிந்து செகண்டரி ஸ்கூலில்) நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு என்னை அக்கிராசனாதிபதியாகத் தேர்ந்தெடுத்து அக்கூட்டத்தில் நிறைவேறினகீழ்க்கண்ட தீர்மானங்களை தங்களுக்கு தெரிவித்துக்கொள்ளுமாறு எனக்கு அனுமதியளிக்கப்பட்டது. இங்ஙனம் தங்கள்,

தெப்பக்குளம் } (Sd) கே. நாராயணஸ்வாமி அய்யர்.
திருச்சி } 3—9—31

தீர்மானங்கள்.

I 'திருச்சி ஸ்ரீரங்கம் வாசிகளடங்கிய இப்பெருங்கூட்டம் ஜனங்களுடைய மதசம்பந்தமான பிராசின பழக்க வழக்கங்களில் அனுவசியமாய் தலையிடுகிறதும், கலியாண விஷயங்களில் மதத்தின் கோட்பாடுகளின்படியும் அவர்கள் மனச்சாக்ஷியின்படியும் நடக்கிறமேன்மைதாங்கிய அரசர் பெருமானின் ராஜவிசுவாசமுள்ள சாதுக்களான பிரஜைகளை அகாரணமாய் துன்புறுத்துவதுமான 1929 வருஷத்திய இளைஞர் விவாகத்தடைச் சட்டத்தை முற்றிலும் கண்டிக்கிறது.

ஷை தீர்மானம் ஸ்ரீமான் டி. கே. பாலசுப்பிரமணிய அய்யரால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் வி. சேஷசாயி அய்யரால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறிற்று.

II (a) 1929ம் வருஷத்திய இளைஞர் விவாகத்தடை சட்டத்தை முற்றிலும் நிராகரிக்கவும் இன்றேல் மதக்கட்டுப்பாடால் அதற்கிணங்கமுடியாத பிராமண முதலிய இதர ஜாதியர்களை பாதிக்காமலிருக்கச் செய்யவும் இப்பொழுது டெல்லிசட்டசபையில் வந்திருக்கிற தீர்மானங்களை இத்திருச்சி ஸ்ரீரங்கம் மஹாஜனங்களடங்கிய கூட்டம்முழுமனதுடன் ஆமோதிக்கிறது,

ஷை தீர்மானம் டாக்டர் ஸ்ரீமான் வி.பி. நடராஜ சாஸ்திரியால் பிரேரேபிக்கப்பட்டு ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸய்யர் வக்கீல், ஸ்ரீமான் டி. எஸ். ராமச்சந்திர அய்யர் இவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறிற்று.

(b) இக்கூட்டம், 1929 வருஷத்திய இளைஞர் விவாகத்தடைச் சட்டத்தை அமுலுக்கு கொண்டுவருவதினாலுண்டாகும் அபாயங்களை அரசாங்கத்தாருக்கு எடுத்துக்காட்டுவதோடு இச்சட்டத்தை ரத்து செய்வதற்காகவும், இன்றேல் மதக்கோட்பாடுகளின்படியும், பிராசின வழக்கத்தினாலும், ப்ரௌடா விவாஹம் செய்யாமலிருந்துவரும் ஜாதியார்களை அச்சட்டத்திலிருந்து

விலக்குவதற்காகவும் தற்காலம் டெல்லி சட்டசபையில் வந்திருக்கும் தீர்மானங்கள் சுலபமாக சட்டமாய் நிறைவேறுவதற்கான வசதிகளை அரசாங்கம் செய்யவேண்டுமென வற்புறுத்துகிறது.

மேற்கண்டவர்களால் கொண்டுவரப்பட்டு ஆமோதிக்கப்பட்டு ஆட்சேபனை அன்னியில் நிறைவேறியது.

III (a) இந்திய ராஜாங்கத்திற்காக புதிதாய் நிர்மாணம் செய்யப்போகிற ராஜீப விதிகளில், அரசாங்கம் ஜனங்களுடைய மத சம்பந்தமானதும், ஜாதிசமூகசம்பந்தமானதும் தொன்றுதொட்டு அனுஷ்டித்துவருவதுமான பழக்கவழக்கங்களையும் முறைகளையும் ஏற்றுக் கொள்ளுகிறது என்றும்' ஒவ்வொருவருடைய தனி உரிமையும், சமூக ஒழுக்கங்களும் சட்டங்களினால் பாதிக்கப்படாமலிருக்க வேண்டுமென்கிறவிதியும் அதில் காணப்படவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

(b) இந்திய அரசாங்கத்திற்காக நிர்மாணம் செய்யபோகிற புதிய விதிகளில், இந்திய சட்டசபை, பிரதிநிதிச்சபைகள் இந்திய மக்களின் மதவிஷயத்திலும் ஜாதி முறைகளிலும் தலையிடக்கூடாதெனும் விதியும் காணப்படவேண்டும், என வக்கீல் ஸ்ரீமான் வி. ஜெயராமய்யரால் பிரேரேபிக்கப்பட்டு பிரும்மஸ்ரீ போலகம் சுந்தரேச சாஸ்திகளால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதுடன் நிறைவேறியது.

IV (மேனாட்டு நாகரீகத்திலீடுபட்ட) சீர்திருத்த வகுப்பைச்சேர்ந்த ஒரு சில ஸ்திரீகள் எல்லா இந்திய ஸ்திரீகளுக்கும் பிரதிநிதியென 'ஸாரதாசட்டத்தை' ஆமோதித்து தீரமானங்கள் நிறைவேற்றி அனுப்புவதற்கு வருந்தி, மிகப் பெரும்பான்மையோரான வைதிகப்பற்றுள்ள மற்ற இந்திய ஸ்திரீகளின் நோக்கம் அவ்வாறல்லவென்றும் இக் கூட்டம் தெரிவித்துக்கொள்கிறது.

ஸ்ரீமான் டி. கே. பாலசுப்பிரமணிய அய்யரால் கொண்டுவரப்பட்டு டாக்டர் ஸ்ரீமான் வி. பி. நடராஜ சாஸ்திரியால் ஆமோதிக்கப்பட்டு நிறைவேறியது.

V. இப் பொதுக்கூட்டம், இங்கு நிறைவேறின தீர்மானங்களை கனம்தங்கிய ராஜப்பிரதிநிதிக்கும், டெல்லி சட்டசபை அக்கிராசனருக்கும், கனம் ஸர் சி. பி. ராமஸ்வாமிஅய்யர் அவர்களுக்கும் ராஜாபகதூர் ஜீ. கிஷ்ணமாச்சாரியார் அவர்களுக்கும், இன்னும் மற்ற அதிகாரிகளுக்கும், அறிவிக்குமாறு கூட்டத்தின் தலைவருக்கு அனுமதியளிக்கிறது.

வக்கீல் ஸ்ரீமான் ஆர். ஸ்ரீநிவாஸய்யரால் பிரேரேபிக்கப்பட்டு பிரும்மஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகளால் ஆமோதிக்கப்பட்டு ஏழ்காபித்து நிறைவேறியது.